රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி: **(94) 011- 2694560** Telephone
ෆැක්ස් தொலைநகல்: **(94) 011- 2692254** Fax
ඊ-මේල් மின்னஞ்சல்: **dgcs@pubad.gov.lk** E-mail
වෙබ් අඩවිය இணையத்தளம்: **www.pubad.gov.lk** Web Site

---

මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/අන්තර්ග්‍රහණය
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2020.07.20

அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவருக்கும்/
திணைக்கள தலைவர்கள் அனைவருக்கும்/
மாவட்ட செயலாளர்கள் அனைவருக்கும்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தரங்களின் தரமுயர்வு</u>**

10/2012(III) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2011.08.01 ஆம் திகதிய மத்திய அரசின் MN4-2006(A) சம்பளத் திட்டத்தின் கீழ் சம்பளம் பெறும் பட்டதாரிப் பதவியொன்றில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள், MN4-2006(A) சம்பளத் திட்டதின் கீழ் சம்பளம் பெறும் 2011.08.01 ஆம் திகதியில் மாகாண அரச சேவையில் இருந்து பின்னர் 16/2010(i) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்க மத்திய அரசில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியொன்றுக்கு இடமாற்றம் பெற்று வந்து சேவையில் ஈட்டிருந்த உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 14 ஆம் பந்திக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்வாங்கும் செயற்பாடுகள் பூர்த்தியடைந்து வருகின்றன.

02. அதற்கிணங்க, அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு உள்வாங்கப்பட்டுள்ள/ உள்வாங்கப்படும் உத்தியோகத்தர்கள் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பார்களாயின் முறையே அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கும் தரம் I இற்கும், தரம் II இற்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய தகைகளைப் பூர்த்தி செய்திருப்பின தரம் I இற்கும் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு (CS/DOS/PRO/APP) இணங்க விண்ணப்பிக்குமாறு உமது அமைச்சில்/ திணைக்களத்தில்/ அலுவலகத்தில் சேவையில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு

அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அதன் போது கிடைக்கும் விண்ணப்பங்களை உமது பரிந்துரைகளுடன் உத்தியோகத்தரின் இற்றைப்படுத்தப்பட்ட வரலாற்றுத் தாளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் எனக்கு அனுப்பி வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்வாங்கல் கடிதம் கிடைத்திராத போதிலும், அந்த உத்தியோகத்தர்களை உள்வாங்கும் சந்தர்ப்பத்திலேயே தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்வதற்கான சாத்தியம் காணப்படுவதனால் தரமுயர்வுக்கு விண்ணப்பிப்பதற்கு அவ்உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குமாறும் உமக்கு அறியத் தருகின்றேன். அதன் போது 2011.08.01 ஆம் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III/II இல் 10 வருடங்களுக்கு மேலாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலம், அந்த உத்தியோகத்தர்களை தரம் II/I இற்கு தரமுயர்த்தும் போது 05/2018 ஆம் இலக்க இணைந்த சேவைச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப கவனத்தில் கொள்ளப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

03. தரங்களின் தரமுயர்வுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 12 ஆம் பிரிவுக்கு இணங்க தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தரம் III/II இற்கு உள்வாங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் பதவியுயர்த்தப்படுவதற்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் பின்வரும் விதத்தில் சித்தியடைந்திருப்பது அவசியமாகும்.

- சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் உரிய தினத்திற்கு முன்னர் சித்தியடைந்திருத்தல்.

- உள்வாங்கப்பட்ட 2011.08.01 ஆம் திகதிக்கு முன்னர், அந்த உத்தியோகத்தர்கள் வகித்த பதவிக்கான அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் மற்றும்/அல்லது இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல். (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 17.1 ஆம் பிரிவுக்கு இணங்க அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர்).

04. மேலே குறிப்பிட்ட சந்தர்ப்பங்களுக்குப் புறம்பாக வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் இருப்பார்களாயின், அவர்கள் உரியவாறு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையாமையின் அடிப்படையில்

உரிய தரமுயர்வை வழங்குவது தொடர்பில் உமது அவதானிப்புக்களையும் பரிந்துரைகளையும் விண்ணப்பப் படிவத்தில் உள்ளடக்குவது கட்டாயமானது என்பதுடன் அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைவது தொடர்பில் அரசாங்க் சேவை ஆணைக்குழுவிடம் வினவி நடவடிக்கை எடுக்கப்படும்.

05. 2007.07.01 ஆம் திகதியின் பின்னர் அரச சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்திருப்பது, தரமுயர்வுக்கான ஒரு தேவைப்பாடாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அரசகரும மொழித் தேர்ச்சியைப் பூர்த்தி செய்வது தவிர்ந்த ஏனைய தகைமைகள் அனைத்தையும் பூர்த்தி செய்திருப்பார்களாயின் 01/2014(VIII) ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அவர்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரமுயர்வுக்கு விண்ணப்பிக்க முடியும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்/. எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்

இணைப்பு 01

CS/DOS/Pro/App

**அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II/I இற்கு சாதாரண செயலாற்றுகையின் அடிப்படையில் தரமுயர்த்துவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் திரு//திருமதி/ செல்வி
2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்
3. பிறந்த திகதி
4. தேசிய அடையாள அட்டை இலக்கம்
5. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமிக்கப்பட்ட/ உள்வாங்கப்பட்ட கடிதத்தின் இலக்கம்:
6. முதல் நியமனத் திகதி
7. நியமனம் நிரந்தரமாக்கப்பட்ட திகதி
8. தரம் II இற்கு தரமுயர்த்தப்பட்ட திகதி (பொருத்தமாயின்)
9. ....... வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்த திகதி மற்றும் பரீட்சை இலக்கம்:
10. உரிய மட்டத்தில் மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பூர்த்தி செய்த திகதி:
11. ...... தரத்தில் பத்து வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த திகதி:
12. தற்போது சேவையாற்றும் அலுவலகம்: அமைச்சு:<br>திணைக்களம்:<br>அலுவலகம்:

..........................................................ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் .......... ஆம் தரத்திற்கு தரமுயர்த்துமாறு வேண்டுகிறேன்.

திகதி:.................................................... ...........................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

---

எனது இலக்கம்:-

இணைந்த சேவைகள் பணிப்பபாளர் நாயகம்,

வணக்கத்துக்குரிய/திரு/திருமதி/செல்வி........................................................................................ ........... இந்த அலுவலகத்தில் சேவையாற்றுவதுடன்

i. .............................. ஆம் திகதி தரம்............... இல் பத்து (10) வருட செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளர் என்றும்,

ii. தரம் .............. இற்கு உரிய பத்து (10) சம்பள ஏற்றங்களை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும்,

iii. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயலொழுங்கிற்கு இணங்க தரமுயர்வு பெறும் தினத்திற்கு முன்னரான பத்து (10) வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதனை விட உயர்ந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருப்பதாகவும்,

iv. அந்த பத்து (10) வருட காலத்தில் ......................அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற லீவுகள் பெற்றுள்ளார் என்றும்/ அரைச் சம்பள மற்றும் சம்பளமற்ற லீவுகள் பெறவில்லை என்றும்,

v. அந்தக் காலத்தினுள் எந்தவொரு தண்டனைக்கும் (எச்சரிக்கை தவிர) உட்படுத்தப்படவில்லை என்றும்,

vi. உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்றும்/ எதிர்காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கவில்லை என்றும்,

vii. .................ஆம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் ................. ஆம் திகதி சித்தியடைந்துள்ளார் என்றும்,

<u>வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை தொடர்பான விபரம்</u>

| வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை நடாத்தப்பட்ட திகதி | உத்தியோகத்தர் பங்கேற்றார்/ பங்கேற்கவில்லை | சித்தியடைந்தார்/ சித்தியடையவில்லை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

**சலுகை வழங்கப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரம்**

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

**உரிய திகதிக்கு முன்னர் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையாமை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

**உரியவாறு வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையாமையின் காரணமாக தரமுயர்வு வழங்குவது தொடர்பில் நிறுவனத் தலைவரின் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகள்**

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

- **வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான அனைத்து ஆவணங்களினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.**

I. .................................... ஆம் திகதி நியமனம் நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என்றும்

II. அரசகரும மொழித் தேர்ச்சியில் சித்தியடையும் தேவை ஏற்புடையதன்று என்றும்/ தேவையைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும்/ பூர்த்தி செய்யவில்லை என்றும், (உரிய ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

III. தரம் .................. இற்கு தரமுயர்துவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும்................. திகதிக்கு உடன் முன்னராக ஐந்து (05) வருட காலப் பகுதியினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும் குறிப்பிடுகிறேன்.

இந்த உத்தியோகத்தர்................. ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II/I இற்கு தரமுயர்த்துவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளமையினால், அத்தினத்திலிருந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் ................. இற்கு தரமுயர்த்துவதற்குப் பரிந்துரைக்கின்றேன்.

நிறுவனத் தலைவரின் கையொப்பம்:
பெயர்
பதவிப் பெயர்

திகதி:.................................................... (உத்தியோகபூர்வ முத்திரை)

குறிப்பு :-

1. **மேலே இலக்கம் I முதல் X வரையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமகளைப் பூர்த்தி செய்திராத விடத்து, அவற்றைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.**
2. **அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II இற்கும் தரம் I இற்கும் தரமுயர்த்துவதற்கான இந்தப் படிவம் 2020.08.01 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் படிவத்திலுள்ள பொருத்தமற்ற பகுதிகளை வெட்டிவிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.**
3. **உத்தியோகத்தரின் இற்றைப்படுத்தப்பட்ட வரலாற்றுத் தாளின் சான்றுப்படுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**